செய்திக்குறிப்பு

POCSO வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்க ஆதரவு நபர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஈரோடு மாவட்டத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 (POCSO Act), POCSO Rules, 2020 மற்றும் தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, அரசாணை (நிலை) எண்.23, நாள் 12.08.2026 ஆகியவற்றின் அடிப்படையில், பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டக் குழந்தைகளுக்கு விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போதுத் தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக **"ஆதரவு நபர்கள் (Support Persons)"** தேர்வுச் செய்யப்பட உள்ளனர்.

ஆதரவு நபர் குழந்தையின் சிறந்த நலன், பாதுகாப்பு மற்றும் உரிமைகளை கருத்தில்கொண்டு, காவல்துறை, குழந்தை நலக் குழு, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு, மருத்துவமனை மற்றும் நீதிமன்றம் உள்ளிட்டத் தொடர்புடைய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்துச் செயல்பட வேண்டும். மேலும், குழந்தைக்குத் தேவையான மருத்துவம், உளவியல் ஆதரவு, கல்வி மற்றும் மறுவாழ்வு சேவைகளைப் பெற உதவுவதுடன், வழக்கின் முன்னேற்றம் குறித்துக் குழந்தை மற்றும் குடும்பத்தினருக்குத் தேவையானத் தகவல்களை வழங்கி, குழந்தையின் பாதுகாப்பை உறுதிச் செய்ய வேண்டும்.

குழந்தைகள் நலன், சுகாதாரம் அல்லது கல்வித் தொடர்பானத் துறைகளில், குறிப்பாகச் சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தை வளர்ச்சி அல்லது குழந்தைகள் நலனுடன் தொடர்புடைய பிறப் பொருத்தமான துறைகளில் முதுகலைப் பட்டம் பெற்ற எந்தவொரு நபரும் விண்ணப்பிக்கலாம். மேலும், குழந்தைகள் கல்வி, வளர்ச்சி, சுகாதாரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான பணிகளில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றப் பட்டதாரிகளும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள். ஆதரவு நபராக நியமிக்கப்படுவதற்கான குறைந்தபட்ச வயது 25 ஆண்டுகள்ஆகும்.

ஆதரவு நபரின் பணிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். தகுதியான ஆதரவு நபர்களுக்கு, அவர்களுக்கு வழக்குகள் ஒதுக்கப்பட்டு, அவ்வழக்குகளில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக மட்டுமே, ஒரு வழக்கிற்கு ரூ.10,000/- வரை மதிப்பூதியம் (பயணச் செலவு உட்பட) வழங்கப்படும். வழக்குகள் ஒதுக்கப்படாதக் காலத்திற்கு எவ்வித மதிப்பூதியமும் வழங்கப்படாது.

தகுதியும் ஆர்வமும் உள்ள தனிநபர்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் தொடர்பான பணிகளில் ஈடுபடும் தகுதியான அமைப்புகள், ஆதரவு நபர் (Support Person) பணிக்கான விண்ணப்பப் படிவத்தை https://erode.nic.in -யில் பதிவிறக்கம் செய்துப், பூர்த்திச் செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் உரிய ஆவணங்களை இணைத்து 19.11.2026 அன்று மாலை 05.30 மணிக்குள் மாவட்ட குழந்தை

பாதுகாப்பு அலகு (DCPU), மாவட்ட ஆட்சியரகம், கூடுதல் கட்டிடம், 6–ஆம் தளம், ஈரோடு – 638 011 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கலாம்.